அண்ணாமலை நகருக்கருகில் உப்பனாற்றின்மீது பாலம்

*** 220. வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா?

(அ) சிதம்பரம் தாலூக்கா, அண்ணாமலை நகர், சந்திரமலையிலிருந்து பேட்டை வரகூர் நடுவில் இருக்கும் உப்பனாற்றின் மீது ஒரு பாலம் கட்டும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எந்த நிலையிலுள்ளது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடம் இல்லை.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : அண்ணாமலை நகருக்கு பக்கத்திலுள்ள பேட்டை வரகூரிலிருந்துதான் எல்லாப் பொருள்களும் வர வேண்டும். நடுவில் இருக்கும் உப்பனாற்றின் குறுக்கே வருவதாய் இருந்தால் பாலம் இல்லை. தண்ணீரைச் சுற்றிக் கொண்டு வருவதாக இருந்தால் 8 மைல் தூரம் வரவேண்டும். ஆகவே, இந்தப்பாலத்தைக் கட்டிக்கொடுக்க அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அந்தந்த மாவட்ட வளர்ச்சி மன்றங்களுடைய சிபாரிசின் அடிப்படையில்தான் வேலைகள் நடைபெற்று வருகின்றன. அது, மூன்றாவது திட்டக் காலத்தில் மேற்படி வரிசைக்கிரமப்படி எடுத்து முடித்த பிறகு, நான்காவது திட்டத்தில் மேற்கொள்ளும் 212 இடங்கள் இருக்கின்றன, அவற்றில் வரிசைக்கிரமப்படி வருகிற பாதை கவனிக்கப்படும். அப்படியின்றி, தனியாக எடுத்துச் செய்ய வேண்டுமென்று சொல்லும் நிலையில், விசேஷ காரணம் எதுவும் சுட்டிக்காட்டப்படவில்லை. ஆகவே, விசேஷ காரணம் சுட்டிக்காட்டி, வருமானால் அதுபற்றி பரிசீலிக்கப்படும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : இதுபற்றி ஏதாவது சிபாரிசு செய்திருக்கிறார்கள் என்று அரசாங்கத்திற்குத் தெரிந்தால் சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அப்படிப்பட்ட சிபாரிசுகள் எதுவும் வந்ததாகத் தெரியவில்லை.

மாம்பாக்கம்-திருப்போரூர் சாலை

*** 221 வினா.—திரு முனு ஆதி :** மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதியைச் சேர்ந்த, மாம்பாக்கத்திலிருந்து காயாறு, வெண்பெடு, இன்னளூர் வழியாக திருப்போரூர் வரை பாதை அமைக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது ?